சென்னையில் போக்குவரத்து மாற்றம்

சென்னை, மே 10–

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற உள்ள ஒற்றுமை பேரணியையொட்டி மெரினாவில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை போக்குவரத்து காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்று மாலை 4 மணிக்கு மெரினா டிஜிபி அலுவலகத்தில் இருந்து தொடங்கும் பேரணி, நேப்பியர் பாலம் அருகில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் 6 மணிக்கு முடிவடையும். இதைத் தொடர்ந்து திருவான்மியூரில் இருந்து காமராஜர் சாலை வழியாக பாரிமுனை நோக்கி வரும் வாகனங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக, சர்தார் படேல் சாலை, காந்தி மண்டபம் சாலை, அண்ணாசாலையை வாகன ஓட்டிகள் பயன்படுத்தி கொள்ளலாம். பாரிமுனையில் இருந்து திருவான்மியூர் செல்லும் வாகனங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, அண்ணாசாலை, தேனாம்பேட்டை காந்தி மண்டபம் வழியாக சென்று இலக்கை அடையலாம்.

அண்ணா சிலையிலிருந்து வரும் மாநகரப் பேருந்துகள் வெலிங்டன் சந்திப்பு ஜிபி சாலை டவர் கிளாக் ஜிஆர்எச் பாயிண்ட் ராயப்பேட்டை நெடுஞ்சாலை லாயிட்ஸ் சாலை ஜம்புலிங்கம் தெரு ஆர்.கே.சாலை வி.எம்.தெரு, மந்தைவெளி மயிலாப்பூர் வழியாக சென்று மத்திய கைலாஷை அடையலாம்.

இதேபோல், கிரீன்வேஸ் பாயின்ட்டில் இருந்து வரும் வாகனங்கள் மந்தைவெளி ஆர்.ஏ. புரம் 2வது பிரதான சாலை, டிடிகே சாலை, அண்ணாசாலை வழியாக சென்று இலக்கை அடையலாம். மேலும், வணிக வாகனங்கள் காமராஜர் சாலை, அண்ணாசாலை, சாந்தோம் நெடுஞ்சாலை, ஆர்.கே.சாலை, கதீட்ரல் சாலை, வாலாஜா சாலையில் மதியம் 12 முதல் இரவு 9 மணி வரை தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புதிய போப் தேர்வு: ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மே.10–

புதிய போப் 14வது லியோவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலிலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் ஸ்டாலின், சமூக வலைதள பக்கத்தில் நேற்றைய பதிவில் கூறியிருப்பதாவது:–

ரோமன் கத்தோலிக்க திருச்சபையை வழி நடத்த தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள திருத்தந்தை போப் 14 வது லியோவுக்கு வாழ்த்துகள். அமைதி மற்றும் ஒற்றுமை குறித்த அவரது செய்தி, உலகம் முழுவதும் நல்லிணக்கத்தை உருவாக்கட்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக இன்று மாலை

போலீஸ் டிஜிபி அலுவலகத்திலிருந்து போர் நினைவுச் சின்னம் வரை ஸ்டாலின் தலைமையில் பேரணி

அமைச்சர்கள், முன்னாள் படைவீரர்கள் பங்கேற்பு

சென்னை, மே 10–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக நடைபெறும் பேரணியில் 10 இடங்களில் மருத்துவ முகாம்கள், 200 இடங்களில் நிழற்கூடாரங்கள், 30 இடங்களில் குடிநீர் தொட்டிகள், 50 இடங்களில் கழிப்பறை வசதிகள், 15 ஆம்புலன்ஸ்கள் பொதுமக்களின் உடனடி வசதிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இப்பேரணியல் கலந்துகொள்ளும் பொதுமக்களும், தங்களுக்குத் தேவையான குடிநீர் கொண்டுவருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கும், தீவிரவாத தாக்குதலுக்கும் எதிராக வீரத்துடன் போர்புரிந்துவரும் இந்திய ராணுவத்திற்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமை உணர்வையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் வகையில் கடற்கரைச் சாலையில் பேரணி நடத்தப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, இன்று மாலை 5 மணிக்கு சென்னை கடற்கரை சாலையில் காவல்துறை இயக்குநர் அலுவலகம் அருகிலிருந்து புறப்பட்டு தீவுத்திடல் அருகே போர் நினைவுச் சின்னம் வரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முன்னாள் படைவீரர்கள், அமைச்சர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் பங்குபெறும் பேரணி நடைபெறவுள்ளது.

200 அரேபியன் கூடாரங்கள்

இப்பேரணிக்கு வருகை தரவுள்ள பொதுமக்களின் தேவைகளுக்காகப் பல்வேறு சிறப்பு வசதிகளைச் செய்துதர முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, பின்வரும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. நிழற் கூடாரங்கள்: வெயிலில் தாக்கத்திற்காக பேரணி நடைபெறும் 200 இடங்களில் அரேபியன் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. கழிப்பறை வசதிகள்: நடமாடும் கழிப்பறைகள் 1 இடத்திற்கு 5 இருக்கைகள் என மொத்தம் 10 இடங்களில் 50 இருக்கைகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் 6 இடங்களில் சீ டாய்லெட் (She Toilet) அமைக்கப்பட்டுள்ளன.

3. குடிநீர் விநியோகம்: பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடும் வகையில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் 30 இடங்களில் தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

4. மருத்துவ முகாம்கள்: பேரணி நடைபெறும் 10 இடங்களில் மருத்துவக் குழுக்களுடன் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், தேவையான குடிநீர் வசதிகள், உயிர்காக்கும் மருந்துகள், ஒரு முகாமிற்கு 3000 ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள் என மொத்தம் 30,000 ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், 15 ஆம்புலன்ஸ்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கால்நடை மருத்துவப் பிரிவின் மூலம், பேரணி நடைபெறும் இடங்களில் நாய்கள் மற்றும் மாடுகளின் இடையூறுகள் ஏற்படாத வகையில் இல்லாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொளத்தூர் கபாலீசுவரர் கலை கல்லூரியில் மாணவர் சேர்க்கை: விண்ணப்பங்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்

சென்னை, மே 10–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, சென்னை கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025–2026–ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:–

கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நான்காம் ஆண்டை நிறைவு செய்து, ஐந்தாம் ஆண்டை தொடங்கியிருக்கும் இந்த வேளையில் வரும் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு இன்று முதல் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொளத்தூரில் அமைந்திருக்கின்ற இந்த கல்லூரியில் தற்போது கல்வி பயின்று வரும் 743 மாணவ, மாணவியருக்கும் இந்த கல்லூரியில் பயின்று டிசிஎஸ் உள்ளிட்ட 9 தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்றிருக்கின்ற வளாக நேர்காணல் மூலம் பணி வாய்ப்பு பெற்றிருக்கின்ற 347 மாணவ, மாணவியருக்கும் கல்வி தந்த கடவுளாக முதலமைச்சர் விளங்குகின்றார். கடந்தாண்டு இந்த கல்லூரியில் பயில 972 மாணவ, மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் 240 மாணவ, மாணவியருக்கு மட்டுமே இடம் அளிக்க முடிந்தது.

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகளில் 10,670 மாணவ, மாணவியரும் 9 கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகளில் 12,137 மாணவ, மாணவியரும் கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் பயில்வதற்கு ஆண்டுதோறும் 5,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெறுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் சி.பழனி, சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் பெ.க.கவெனிதா, எவர்வின் பள்ளி தாளாளர் பா.புருஷோத்தமன், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் நாகராஜன், அமுதா, சாரதா, யோகப்பிரியா மற்றும் ஐ.சி.எப்.முரளிதரன், தனசேகரன், சந்துரு, மகேஷ்குமார், கல்லூரி முதல்வர் சி.லலிதா மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

முதல் முறையாக பயணம் மேற்கொள்ளும்

5,650 ஹஜ் பயனாளிகளுக்கு தலா ரூ.25,000: முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மே 10–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

2024–25–ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முதலமைச்சர் அறிவுரைக்கிணங்க, முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஹஜ் மானியத் தொகை இந்த ஆண்டு முதல் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது நினைவிருக்கலாம்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால், 14 கோடியே 12 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் 5,650 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.அப்துல் சமது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா. விஜயராஜ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வளசரவாக்கத்தில் ரூ.27.69 லட்சம் மோசடி: பல் மருத்துவர் கைது

சென்னை, மே 10–

வளசரவாக்கத்தில் 27.69 லட்சத்தை மோசடி செய்த பல் மருத்துவர் கைது செய்யப்பட்டார்.

கூடுவாஞ்சேரி, ராம்தாஸ் தெருவிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் ஐஸ்வர்யா (27) என்பவர் அவருடைய தோழி மூலம் அறிமுகமான ஆழ்வார் திருநகர், சிதம்பரனார் தெருவில் பல் மருத்துவ கிளினிக் நடத்தி வரும் பல் மருத்துவர் ஹரிஷ் வெங்கடேஸ்வரன் மற்றும் அதனை நிர்வகித்து வரும் வீணா ஆகியோர், இந்த பல் கிளினிக்கை விரிவுபடுத்த பணம் தேவைப்படுவதாகவும், நீங்கள் எங்களது கிளினிக்கை விரிவுபடுத்த பணம் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாகவும் கூறியதன்பேரில், ஐஸ்வர்யாவும், அவரது கணவர் சதிஷ்குமாரும் பல வங்கிகளில் மொத்தம் ரூ.40.69 லட்சம் கடனாக பெற்று, ஹரிஷ் வெங்கடேஸ்வரன் மற்றும் வீணா ஆகியோரிடம் கொடுத்துள்ளனர்.

பணத்தை பெற்று கொண்ட இருவரும் தங்களுக்கு மாதம் ரூ.1 லட்சம் வீதம் 60 மாதங்கள் தருவதாக கூறி, 13 மாதங்கள் மட்டும் மாதம் ரூ.1 லட்சம் கொடுத்ததாகவும், அதன் பின்னர் பணத்தை தராமல் ஏமாற்றியதாகவும், எங்களை ஏமாற்றிய இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து பணத்தை பெற்று தருமாறு வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி ரூ. 27.69 லட்சத்தை திரும்ப தராமல் மோசடி செய்த பல் மருத்துவர் ஹரிஷ் வெங்கடேஸ்வரனை கைது செய்தனர்.

விசாரணையில் ஹரிஷ் வெங்கடேஸ்வரன் ஏற்கனவே ஒரு நபரிடம் பண மோசடி செய்தது தொடர்பாக கைதாகி சிறைக்கு சென்றுள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி ஹரீஷ் வெங்கடேஸ்வரன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

எடப்பாடி பழனிசாமி பிறந்த நாள்: திருப்போரூர் கந்தசாமி கோவிலில் தங்கத்தேர் இழுத்து வழிபாடு

முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி பங்கேற்பு

திருப்போரூர், மே 10–

எடப்பாடி பழனிசாமியின் 71ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா தி.மு.க.வினர் தங்கத்தேர் இழுத்து வழிபாடு செய்தனர்.

முன்னாள் முதல்வரும், அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமியின் 71ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட ஜெயலலிதா பேரவை சார்பில் திருப்போரூர் கந்தசாமி திருக்கோவிலில் தங்கத்தேர் எழுத்து சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது.

பேரவை செயலாளர் பக்தவச்சலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் முன்னிலை வகித்தார். முன்னாள் அமைச்சரும் அதிமுக மாநில மகளிர் அணி செயலாளருமான பா.வளர்மதி மற்றும் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கே.எஸ்.சீனிவாசன் ஆகியோர் பங்கேற்று எடப்பாடி பழனிசாமி நீண்ட ஆயுளுடன் நலமுடன் வாழ வேண்டியும், வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. பெருவாரியான வெற்றி பெற்று எடப்பாடி தலைமையிலான ஆட்சி அமைய வேண்டியும் தங்கத்தேர் இழுத்து சிறப்பு வழிபாடு செய்தனர். இதனைத் தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

5 முக்கிய தீர்மானங்கள்

முன்னதாக தனியார் திருமண மண்டபத்தில் அதிமுக வளர்ச்சி பணிகள் குறித்த மாவட்ட அளவிலான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மே 12 எடப்பாடி பிறந்த நாள் விழாவில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, 2026ல் எடப்பாடி பழனிசாமியை முதல்வர் ஆக்குவது தீர்மானங்கள் திராவிட ஆட்சியின் அவல நிலைகள் குறித்து தொடர்ந்து பொதுக் கூட்டங்கள் நடத்துவது தென்னை பிரச்சாரங்கள் நடத்துவது உள்ளிட்ட ஐந்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளரும் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினருமான மரகதம் குமரவேல், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தண்டரை கே.மனோகரன், மாவட்ட கழக அவை தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தனபால், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர்கள் கோ.அப்பாதுரை, அனந்தமங்கலம் பி.சுப்ரமணியன், மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்வந்த்ராவ், ஒன்றிய செயலாளர் எஸ் .குமரவேல் , திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திருவிடந்தை குட்டி (எ) நந்தகுமார் திருப்போரூர் நகரச் செயலாளர் சிவராமன் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் மற்றும் பேரவையின் மாவட்ட ஒன்றிய பேரூர் நகர கழக ஊராட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மகளிர் அணியினர் இளைஞர் அணிகள் என சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட பேரவை இணைச் செயலாளரும், முட்டுக்காடு முன்னாள் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவருமான லயன் டாக்டர் எம் எஸ் பாஸ்கரன் நன்றி தெரிவித்தார்.

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

CIN : L65993TN1993PLC024861

பதிவு அலுவலகம்: பழைய எண்.11, புதிய எண்.2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி. நகர், சென்னை,
தொலைபேசி எண்.044 49530954 | Email: abi@afslindia.in, Website : www.afslindia.in

31 மார்ச் 2025ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

விவரங்கள்	மார்ச் 31, 2025 முடிந்த 3 மாதங்கள் (தணிக்கை யானது)	டிசம்பர் 31, 2024 முடிந்த முந்தைய 3 மாதங்கள் (தணிக்கை செய்யாதது)	மார்ச் 31, 2024 முடிந்த முந்தைய 3 மாதங்கள் (தணிக்கை யானது)	மார்ச் 31, 2025 முடிந்த ஆண்டு (தணிக்கை யானது)	மார்ச் 31, 2024 முடிந்த ஆண்டு (தணிக்கை யானது)
1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம்	-				-
(b) இதர வருமானம்	31.44	33.79	58.01	144.62	183.13
2. மொத்த வருமானம் (1+2)	31.44	33.79	58.01	144.62	183.13
3. செலவினம்					
மூலதனப் பொருட்கள் உபயோக செலவு	-	-	-	-	-
வர்த்தகத்தில் பங்கு கொள்முதல்	-	-	-	-	-
மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள்	-	-	-	-	-
ஊழியர் செலவினம்	6.30	7.78	8.54	26.36	26.60
நிதி செலவு	0.00	0.08	-	0.52	1.25
தேய்மானம்	0.14	0.14	0.20	0.50	0.79
இதர செலவினம்	9.01	7.70	8.61	36.82	45.32
மொத்த செலவுகள்	15.45	15.70	17.35	64.20	73.96
4. வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன் லாபம்/(நஷ்டம்) (3-4)	15.99	18.09	40.66	80.42	109.17
5. விதிவிலக்கான பொருட்கள்	-	-	-	-	-
6. வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) (4 - 5)	15.99	18.09	40.66	80.42	109.17
7. வரி செலவுகள்					
நடப்பு வரி	5.00	5.00	15.49	20.00	29.69
தற்போதைய வரி உண்மை குறைவு முந்தைய ஆண்டு	-	-	-	2.73	(65.67)
ஒத்திவைக்கப்பட்ட வரி	-	-	-	-	-
மொத்த வரி செலவுகள்	5.00	5.00	15.49	22.73	(35.98)
8. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (6 - 7)	10.99	13.09	25.17	57.69	145.15
9. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)	-	-	-	-	-
10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள்s	-	-	-	-	-
11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (9-10)	-	-	-	-	
12. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (8+11)	10.99	13.09	25.17	57.69	145.15
13. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-	-
a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-
(ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-
b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-
(ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-
மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-	-
14. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (12+13)	10.99	13.09	25.17	57.69	145.15
15. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-)	540.00	540.00	540.00	540.00	540.00
16. ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை	0.20	0.24	0.47	1.07	2.69
பலமிழந்தது	-	-	-	-	-

குறிப்பு:

1. 31 மார்ச் 2025ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 09 மே, 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. மார்ச் 31, 2025 அன்று நடந்த காலாண்டிற்கான நிதி முடிவுகள் தொடர்பாக சட்டப்பூர்வ தணிக்கையாளரால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கை, மே 09, 2025 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவால் பதிவு செய்யப்பட்டது..
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் மீருரூப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் - இல்லை.

மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	31 மார்ச், 2025 அன்று	31 மார்ச், 2024 அன்று
ஆஸ்திகள்		
நடப்பு அல்லாத ஆஸ்திகள்		
சொத்து, ஆலை மற்றும் கருவிகள்	0.93	0.73
முதலீடுகள்	105.46	89.34
இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள்	1.72	1.69
	108.11	91.76
நடப்பு ஆஸ்திகள்		
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது	1,840.88	1,887.02
இதர நடப்பு ஆஸ்திகள்	78.99	127.69
	1,919.87	2,014.71
மொத்தம் - ஆஸ்திகள்	**2,027.98**	**2,106.47**
சம மற்றும் பொறுப்புகள்		
சமம்		
பங்கு மூலதனம்	540.00	540.00
இதர சமம்	1,444.04	1,521.11
	1,984.04	2,061.11
நடப்பு அல்லாத பொறுப்புகள்		
கடன்கள்	-	-
நடப்பு பொறுப்புகள்		
இதர நடப்புச பொறுப்புகள்	23.93	15.67
ஒதுக்கீடுகள்	20.00	29.69
	43.93	45.36
மொத்த சம மற்றும் பொறுப்புகள்	**2,027.98**	**2,106.47**

நிகர லாப நல்லிணக்கம்

முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த ஏஎஸ்க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது		
	தணிக்கை செய்தது		
	31.03.2025 முடிந்த காலாண்டு	31.03.2024 முடிந்த காலாண்டு	31.03.2024 முடிந்த ஆண்டு
ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம்	10.99	25.17	145.15
கழிக்க :			
இதர விரிவான வருமானத்தில்]இயல்பான லாபம்/(நஷ்டம்)	-	-	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)	**10.99**	**25.17**	**145.15**
இதர விரிவான வருமானம்			
திரும்ப வாங்குதல் தொடர்பான பரிவர்த்தனை செலவு *	-	-	-
இதர விரிவான வருமானம் (B)	-	-	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)	**10.99**	**25.17**	**145.15**

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
ஒப்பம்/–
சித்ரா சிவராமகிருஷ்ணன்
முழு நேர இயக்குனர்
DIN: 00292725

இடம்: சென்னை
தேதி: 09 மே, 2025